பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 01 2026** **THURSDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2)** நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டாக உள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

**3)** திருவள்ளூர் மாவட்டத்தில் அமையவுள்ள அறிவுசார் நகரத்திற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

**4)** தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு கேள்விக்குறியாக இருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

**5)** தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் சேவைத்துறை வளர்ச்சியடைந்துள்ளதாகவும், உற்பத்தித் துறை மற்றும் வேளாண் துறை வலுவடைந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின்போதும், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக பொருளாதார ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேளாண்துறை மூன்று புள்ளி ஒரு சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும், சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் மூலம் தொழில்துறை வளர்ச்சியடையும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

காய்கறி மற்றும் பயறு வகைகளின் விலை சரிந்துள்ளதால், நாட்டின் பணவீக்க விகிதம் ஒன்று புள்ளி ஏழு சதவீதமாக குறைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டாக உள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆய்வறிக்கை அரசின் நலத்திட்டங்களை பிரதிபலிப்பதாக கூறினார்.

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை நாட்டின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஐந்தாண்டுகளில் நாட்டின் வேளாண் துறையின் வளர்ச்சி நான்கு புள்ளி நான்கு சதவீதமாக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்குடன் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னையில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி மாநாட்டில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் இனாம்பாக்கம் மற்றும் மேல்மளிகைபட்டு கிராமத்தில் அமையவுள்ள அறிவுசார் நகரத்திற்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

உயர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்பம், தொழில்முனைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து 872 ஏக்கர் பரப்பளவில் இந்த அறிவுசார் நகரம் அமைக்கப்பட உள்ளது.

தமிழகத்தை அறிவுசார் சிறப்புக்கான உலகளாவிய மையமாக நிலை நிறுத்துவதை நோக்கமாக கொண்டு அமைக்கப்பட உள்ள இந்த அறிவுசார் நகரம் மூலம், வரும் ஆண்டுகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் உருவாக வாய்ப்பு ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில், மெல்போர்ன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இதில் ஐந்து விருப்பக் கடிதங்கள் கையெழுத்திடப்பட்டு, எட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மொத்தம் 355 கோடி ரூபாய் முதலீட்டு மதிப்புடன் 2 ஆயிரத்து 255 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 9 ஆயிரத்து 650 பேருக்கு மறைமுக

வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் **822** கோடியே **70** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலைய கட்டுமானப் பணிக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

பயணிகளுக்கும், பேருந்து போக்குவரத்திற்கும் ஏற்படும் இடையூறுகள் முற்றிலுமாக இதன்மூலம் தவிர்க்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இரண்டாவது அடித்தளம் கார் நிறுத்தும் இடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் இரண்டடுக்கு கார் நிறுத்தம் அமைக்க உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தரை மற்றும் முதல் தளம் பேருந்து நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் **73** பேருந்து நிறுத்துமிடங்கள் மற்றும் பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பெண்களுக்கும், வட மாநிலத்தவர்களுக்கும் எதிராக வன்கொடுமை நடந்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், போதைப்பொருள் பழக்கத்தால் தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழகத்தில் கொடூர கொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் நடைபெற்று வருவதாக கூறியுள்ள அவர், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் குறை கூறியுள்ளார்.

பீகார் மாநிலத்தை சேர்ந்த தொழிலாளர் கொலை செய்யப்பட்டதும், அவரது மனைவி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிற மாநிலத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழகத்தில் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு கேள்விக்குறியாக இருப்பதாகவும், தினந்தோறும் குற்றச்சம்பவங்கள் நடைபெறுவதாகவும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக அதிக இடங்களில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அஇஅதிமுக கூட்டணி அமைப்பதில் எந்தவித அழுத்தமும் இல்லை என்று கூறிய அவர், கூட்டணி இறுதி செய்யப்பட்டவுடன் தொகுதி பங்கீடு நடைபெறும் என்று தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் 4 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்துள்ளதாக ஆளுநரிடம் மனு அளித்துள்ளதை திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி பலமாக அமைந்திருப்பதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக கூட்டணியில் விரிசல் ஏற்பட்டிருப்பதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி மெகா கூட்டணியாக மாற உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம், பாலியல் வன்கொடுமை, கொலை சம்பவங்கள் நடைபெற்றுவருவதாக அவர் குறை கூறினார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கோவையில் சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் இன்று சென்னையில் ஆயிரத்து 627 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

--------------------

திருச்சியில் நடைபெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறையில் மாநிலம் முழுவதிலும் இருந்து 173 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

--------------

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தஞ்சாவூர் மக்கள் தொடர்பக கள அலுவலகம் சார்பில், அரசு மக்கள் நலத்திட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திருவாரூரில் இன்று நடைபெற்றது.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

------------------

கடலூரில் தூய்மைப்பணியாளர் நல வாரிய ஆய்வுக்கூட்டம், அந்த வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------------

அரியலூரில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ரத்னசாமி தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isharani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 14-21, 21-14 என்ற செட் கணக்கில், தைவானின் Shou Yun Sung-ஐ வென்றார்.**

**இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் Tharun Mannepalli-யும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

**------------**

**ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தில், முதல் நாளான இன்று பரோடா அணி முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்பிற்கு 247 ரன் எடுத்துள்ளது.**

**சேலத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற பரோடா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.**

**-----------------**

**மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.**

**வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.**

-------------

நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையத்தில் தேசிய அளவிலான இளையோர் பூப்பந்தாட்ட போட்டி இன்று தொடங்கியது.

**<<<<<<<END>>>>>>>**